# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1988/21 - 2016 ඔක්තෝබර් මස 12 වැනි බදාදා - 2016.10.12

1988/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்.: BD/EL/LND/AQUSN/15.
காணி அமைச்சின் குறிப்பிலக்கம்.: 4/3/9/2012/WS/197.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2015 பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி என்னால் குறிப்பிடப்பட்ட 1901/10 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் இலக்கம் 02-727 இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள திகதியை அகற்றி அதற்குப் பதிலாக வேரொரு திகதியை குறிப்பிடுவதன் மூலம் அவ்வறிவித்தல் கீழ்க் கண்டவாறு திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

| அகற்ற வேண்டிய திகதிகள் | அதற்கு பதிலாக திருத்த வேண்டிய திகதிகள் |
|---|---|
| 2015 மாச்சு 18 | 2016 திசெம்பர் 05 |
| 2016 மாச்சு 11 | 2016 நவெம்பர் 28 |

கே. டீ. தனுக்ஷா என் அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
எல்ல.

பிரதேச செயலகம்,
எல்ல,
2016, ஒற்றோபர் 05.

10 - 1645

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: கேடீஎஸ்/கேஜீகே/3/2(1)/2012/எல்ஏ.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 1926/22 ஆம் இலக்கமும் 2015 ஓகத்து 05 ஆம் திகதியுமிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை யில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தலில் பின்வரும் திகதிகள் நீக்கப்பட்டு பதிலாக வேறு திகதிகள் குறிக்கப்படு வதன் மூலம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் பகிரங்க அறிவித்தல் மூலம் தெரிவிக்கப் படுகின்றது.

| நீக்கப்பட்ட திகதி | பதிலாக சேர்க்கப்பட்ட திகதி |
|---|---|
| 2015 ஓகத்து 05 | 2016 ஒற்றோபர் 27 |
| 2015 யூலை 27 | 2016 ஒற்றோபர் 20 |

பி. எம். பீ. ஜீ. பீ. வி. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி, கடவத்சத்தர,
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி, கடவத்சத்தர,
கங்கவட்ட கோரளை,
2016, செத்தெம்பர் 29.

10 - 1646

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/84/2011/11.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேசச் செயலகப் பிரிவில், ராகம்பத்துவ சிறுபிரிவில், நவம்மஹர கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3992 மற்றும் 2016.05.12 ஆந் திகதியிட்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல.1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்ட 0.5040 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க்காணும் விபரங்கள் கொண்ட காணித்துண்டுகள்.

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: - ; விபரம்: ஓடை; உரிமை கோரு பவர்: அப்துல் கபூர் அனாஸ், இல. 10, ஹம்ஸா தோட்டம், முதுவெல மாவத்தை, கொழும்பு 15; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.1020 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2

காணியின் பெயர்: கஜுகஹாகும்புர; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அப்துல் கபூர் அனாஸ், இல. 10, ஹம்ஸா தோட்டம், முதுவெல மாவத்தை, கொழும்பு 15; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.4020 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2016, ஒற்றோபர் 07.

10 - 1650